# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2019 சனவரி

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு என்னும் வினாப்பத்திரம் பாடப்புத்தகத்தை (கோட்பாடுகள் மற்றும் நடைமுறை சார்ந்த) அடிப்படையாகக் கொண்ட ஒன்பது (9) கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாகும். இங்கு மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. அவையாவன, ஒவ்வொன்றும் ஐந்து (5) புள்ளிகளைக் கொண்ட நான்கு (4) கட்டாய வினாக்களைக் உள்ளடக்கிய **பகுதி (A),** ஒவ்வொன்றும் பத்து (10) புள்ளிகளைக் கொண்ட மூன்று (3) கட்டாய வினாக்களை உள்ளடக்கிய **பகுதி (B)** மற்றும் ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட இரண்டு (2) கட்டாய வினாக்களை உள்ளடக்கிய **பகுதி (c)** என்பனவாகும்.

அதிகளவான வினாக்கள் பாடப்புத்தகத்தினை (கோட்பாடுகள் மற்றும் நடைமுறை சார்ந்த) அடிப்படையாகக் கொண்டிருந்தன. பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தைப் படித்து, கடந்த கால வினாப்பத்திரங்களையும் செய்து பார்த்திருப்பின், இவ்வினாப்பத்திரத்திற்கு இலகுவாக 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருக்க முடியும். அதிகளவான பரீட்சார்த்திகள் பாடம் சம்பந்தமான அறிவினைக் கொண்டிருந்தனர் ஆயினும், பாட விடயங்களின் அடிப்படையில் விடைகளை எவ்வாறு கட்டமைப்பது என்பது பற்றிய பயிற்சி அவர்களிடம் குறைவாகப் காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இப்பத்திரத்திற்கான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை என்பதுடன் சில பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே 75 புள்ளிகளுக்கும் அதிகமான புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர்கள் இப்பத்திரத்திற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை முகாமித்ததன் மூலம் சகல வினாக்களுக்கும் முறைமையாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், 25 புள்ளிகளுக்கும் குறைவாகப் பெற்றிருந்த குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாப் பத்திரத்திலிருந்த பெரும்பாலும் சகல வினாக்களுக்கும் விடையளிக்க முயற்சித்தோ, விடையளித்தோ இருந்தனர். எவ்வாறாயினும், வேறு சில பரீட்சார்த்திகளால் சில பகுதிகளுக்கு விடை அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் பிரதானமாக தவறான நேர முகாமைத்துவம், குறைந்த அறிவு, வினாப்பத்திரத்திலுள்ள வினாக்கள் தொடர்பில் விளக்கமின்மை போன்ற காரணங்களால் விடையளித்திருக்கவில்லை.

இவற்றிற்குப் புறம்பாக, புள்ளியிடும் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான வழுக்கள் பின்வருமாறு;

- பகுப்பாய்வுத் திறன்களின் குறைபாடு
- நேர்த்தியற்ற கையெழுத்து
- உயர் புள்ளிகள் வழங்கப்பட்டிருந்த வினாக்களுக்கு குறுகிய விடைகள் எழுதப் பட்டிருந்தமை
- குறைந்த புள்ளிகள் வழங்கப்பட்ட வினாக்களுக்கு நீண்ட விடைகள் எழுதப்பட்டிருந்தமை
- தரப்பட்ட விடயங்களில் பிரச்சினைகள் இனங்காணப்பட்டதாயினும், வினாக்களுக்கு ஏற்றாற்போல் விடைகள் வழங்கப்படாமை
- விடைகளைத் திட்டமிடாமை, சம்பந்தமற்ற விடைகளின் வழங்கலுடன் முடித்திருத்தல்
- வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டவாறு ‘‘வினைச் சொல்’’ பற்றிக் கவனம் செலுத்தாமை

# பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

**வினா இல. 01** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 05)

இவ்வினாவில் முன்னணி மென்பொருள் அபிவிருத்திக் கம்பனியில் தாக்கம் செலுத்தும் வெளிவாரிச் சூழல் பற்றிப் பரீட்சிக்கப்பட்டிருந்தது. இவ்வினாவின் முதல் பகுதி நேரடியான கேள்வியாக இருந்ததுடன் வெளிவாரிச் சூழலின் இரண்டு பிரதான அழுத்தக் காரணிகளை அடையாளங் காணுமாறு பரீட்சார்த்திகள் கோரப்பட்டிருந்தனர். வினாவின் இரண்டாம் பகுதியானது முதலாம் பகுதியின் கீழ் அடையாளம் காணப்பட்ட பிரதான காரணிகளை நியாயப்படுத்தும் பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேவைப்படுத்தப்பட்டதைச் சரியாக விளங்கிக்கொண்டு, சரியானவாறு விடையளித்து மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். எனவே, வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும், வினாவுடன் தொடர்பற்ற விடைகளை வழங்கி, புள்ளிகளைப் பெற்றிராத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். அத்துடன் சிலர் வினாவில் கேட்கப்பட்டதற்குச் சம்மபந்தமற்ற வகையில் பொதுவான விடைகளைக்கூட வழங்கியிருந்தனர்.

உதாரணம்: தொலைத்தொடர்பு, சூழல் நேயம், போக்குவரத்து போன்றவை.

**வினா இல. 02** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 05)

இவ்வினா ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான நிதிக் கூற்று உறுதிப்பாடுகள் மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரியானதாக இருந்ததுடன் ஒரு சில பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடிய தாகவும் இருந்தது.

சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட வினாவுடன் தொடர்பற்ற நீண்ட பந்திகளுடனான விடைகளை அளித்திருந்தனர். அத்துடன் சில பரீட்சார்த்திகள் முழு விடையின் நெடுகிலும் 'முழுமை' போன்ற ஒரு உறுதிப்பாட்டினை மாத்திரம் கலந்தாலோசித்திருந்தனர். எனவே நிதிக் கூற்று உறுதிப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்ததையே இது காட்டுகிறது.

**வினா இல. 03** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 05)

இவ்வினாவின் பகுதி **(a)** ஆனது கம்பனி ஒன்றின் கணக்காய்வாளராக நியமிக்கப்படவோ அல்லது தொழிற்படவோ முடியாத நபர்கள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்ததுடன் வினாவின் இரண்டாம் பகுதியானது, புதிய நியமனமொன்றை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் கணக்காய்வாளரால் முன்னெடுக்கப்பட வேண்டிய விதிமுறைகளைப் பரீட்சித்திருந்தது.

இவ்வினா மிகவும் நேரடி வினாவாக இருந்ததுடன் நேரடி விடைகள் வழங்கப்பட்டிருக்க முடியும். **பகுதி (a)** இற்காக, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்ததால் செயலாற்றுகையும் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. **பகுதி (b)** இற்கு பெரும்பாலானவர்களால் மிகவும் குறைந்தளவிலேயே விடையளிக்கப்பட்டிருந்தன என்பதால் செயலாற்றுகையும் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. வினாவின் **பகுதி (b)** இற்கு விடையளிக்க எத்தனித்த அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைத் தவறாக விளங்கிக் கொண்டிருந்ததுடன் ஈடுபடுத்தல் கட்டுறுப்புக்கள் கடிதம் போன்ற தவறான விடைகளை அளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் (AGM) கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கின்ற படிமுறைகள் போன்றவற்றை எழுதியிருந்தனர்.

**வினா இல. 04** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 05)

இவ்வினாவின் **பகுதி (a)** இன் கீழ், **சொத்துக்களின் கையாடல்** என்பதால் யாது கருதப்படுகிறது என்பதை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர்.

சில விடைகள் மிகவும் குறுகியதாகவும் வெறுமனே சொத்துக்களின் திருட்டைக் குறிப்பிட்டிருந்தன. இது ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெறுவதற்குப் போதுமானதல்ல. அத்துடன் அதிகளவான பரீட்சார்த்திகள் திருட்டினை விட தவறான பயன்பாடு மற்றும் தனிப்படட ஆதாயம் போன்ற பதங்களைப் பயன்படுத்தியிருந்தனர். பரீட்சகர், மோசடியின் ஒரு வகையினை மாத்திரம் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்திருந்தார்.

வினாவின் **பகுதி (b)** யின் கீழ், பரீட்சார்த்திகள் **வரையறுக்கப்பட்ட ரோமா கம்பனியின்** மோசடி இடரை அதிகரிக்கக்கூடிய இரண்டு புறநிலைகள் / சம்பவங்களை அடையாளம் காண்பதற்கு தேவைப்படுத்தப்பட்டிருந்தனர். ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. சிலரைத் தவிர ஏனைய சகல பரீட்சார்த்திகளும் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். மோசடி இடரை அல்லது வழுவை அதிகரிக்கின்ற புறநிலைகள் அல்லது சம்பவங்கள் தொடர்பில் சரியான பாட அறிவைக் கொண்டிராத போதிலும், விவரணத்தில் தரப்பட்டிருந்த விடயங்களை எழுதியிருந்த பரீட்சார்த்திகளும்கூட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

**வினா இல. 05** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 10)

வினாவின் **பகுதி (a)** ஆனது, உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுடன் தொடர்புடைய நடைமுறை அறிவினைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் என்றால் என்னவெனச் சரியாக விபரித்ததன் மூலம் அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

வினாவின் **பகுதி (b)** ஆனது, உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களுக்குரிய நடைமுறை உலகின் உதாரணங்களை அடையாளம் காணும் பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பொதுவான உதாரணங்களைப் பயன்படுத்தி விடையளித் திருந்ததுடன் ஒட்டுமொத்தச் செயலாற்றுகையும் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. பொதுவாக, பரீட்சார்த்திகள் இருப்புகள், கடன்கொடுத்தோர், ஊழியர்கள் போன்றவற்றை எழுதியிருந்தனர்.

வினாவின் **பகுதி (c)** ஆனது, **வரையறுக்கப்பட்ட செக்ரஸ் கம்பனியின்** நிதிசார் எதிர்வுகூறல் பற்றி கணக்காய்வாளர் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் வகையைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள், இப்பகுதிக்கு விடையளிப்பதைத் தவிர்த்தி ருந்ததுடன் விடையளித்திருந்த பரீட்சார்த்திகள்கூட நியாயமான மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை அடையாளம் காணத் தவறியிருந்தனர். எனவே இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

**வினா இல. 06** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினாவின் **பகுதி (a)** இன் கீழான **பகுதி (i)** இல், கணக்காய்வு விதிமுறைகளின் வகைகளான பரீட்சிப்பினை அவதானித்தலிலிருந்து பரீட்சார்த்திகள் வேறுபடுத்துவதை பரீட்சகர் எதிர்பார்த்தி ருந்தார். இது ஒரு தொழில்நுட்ப வினாவாக இருந்ததுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க, கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதில் இரண்டு கணக்காய்வு விதிமுறைகளை பரீட்சார்த்திகள் வேறுபடுத்துவது பரீட்சகரால் எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் மிகவும் குறைந்தளவு புள்ளிகளே பரீட்சார்த்திகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

பரீட்சகரால் அடையாளம் காணப்பட்ட பொதுவான சில தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன:

- சில பரீட்சார்த்திகள் அவதானித்தலுக்கு பரீட்சிப்பின் வரைவிலக்கணத்தை எழுதியிருந்தனர்.
- சிலர் பரீட்சிப்பினை கணக்காய்வு விதிமுறைகளின் பரீட்சிப்பாக விளக்கியிருந்தனர்.
- கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பரிசீலனை
- ஒன்றன்பின் ஒன்றாக கணக்குகளின் தயாரிப்பு

வினாவின் **பகுதி (a)** யின் கீழுள்ள **பகுதி (ii)** இல், பரீட்சகரினால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று பற்றிச் செயலாற்றுவதற்கான கணக்காய்வு விதிமுறைகளை அடையாளம் காண்பதற்கு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். இது ஒரு நடைமுறை சார்ந்த வினாவாக இருப்பதுடன் பரீட்சார்த்திகள் கோட்பாட்டு ரீதியான அறிவுடன் அவர்களுடைய நடைமுறைக் கணக்காய்வு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி விடையளித்திருக்க முடியும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகளிடம் வங்கிக் கணக்கிணக்கங்களை கணக்காய்வு செய்வதன் மீது எதுவித யோசனைகளும் காணப்படவில்லை என்பதுடன் அவர்கள் வெறுமனே கணக்காய்வு விதிமுறைகளைக் குறிப்பிட்டிருந்தனர்;

- பரீட்சித்தல்
- அவதானித்தல்
- விசாரித்தல்
- மீள் - கணிப்பிடல்
- புலனாய்வு செய்தல்

வினாவின் **பகுதி (b)** ஆனது, முன்னரே செலுத்தப்பட்ட வாடகைச் செலவுகளை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வு விதிமுறைகளை பிரயோகிப்பதில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்துவதன் மூலமான தேவைப்பாடுகளுடன் சரியாகத் திட்டமிட்டிருக்கவில்லை. எனவே, இந்த வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

பரீட்சகரால் அடையாளம் காணப்பட்ட பொதுவான பிழையாக அளிக்கப்பட்ட விடைகள் பின்வருமாறு

- விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதை நிச்சயப்படுத்தல்
- முற்கொடுப்பனவுகளின் சரிப்படுத்தல்
- முற்கொடுப்பனவுகளின் பரீட்சிப்பும் அவதானிப்பும்

**வினா இல. 07** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 10)

வினாவின் பகுதி **(a)** இன் கீழுள்ள **பகுதி (i)** ஆனது, வெளிவாரி உறுதிப்படுத்தல்களுடன் தொடர்புடையது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமான முறையில் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். செயலாற்றுகையானது மிகவும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

பகுதி **(a)** இன் கீழுள்ள **பகுதி (ii)** ஆனது கணக்காய்வாளர் உறுதிப்படுத்தல் கோரிக்கையை அனுப்புவதற்கு முகாமை மறுக்குமாயின் கணக்காய்வாளரால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்க எத்தனித்திருந்ததுடன் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட பொதுவான பிழையான விடைகள் பின்வருமாறு:

- வெளிவாரித் தரப்பினரிடமிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் - (பொது)
- ஈடுபடுத்தல் கடிதத்தின்படி செயற்படுதல்
- முகாமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்

வினாவின் **பகுதி (b)** ஆனது கணக்காய்வு ஈடுபடுத்தற் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றிப் பரீட்சித்திருந்தது. இது தொடர்பில், பரீட்சார்த்திகளின் நடைமுறை சார்ந்த மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவு மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்பட்டது. தொழில் உடன்படிக்கை ஒன்றில் கூட்டிணைக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட சில விடைகளாக கணக்காய்வாளரின் பதவி, தொடர்புடைய பிரிவு, காலப்பகுதி, முகாமையின் சம்மதம் என்பன காணப்பட்டன. இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

## <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

**வினா இல. 08** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 25)

இந்தப் பகுதியில், பரீட்சகரால் விடய ஆய்வு ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன், இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகம் தொடர்பான கோட்பாட்டு ரீதியான அறிவு மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகளுடனான IT பொதுக் கட்டுப்பாடுகள் ஆகியன தொடர்பிலான இரண்டு வினாக்களும் வினவப்பட்டிருந்தன.

### <u>பகுதி A</u>

வினாவின் இப்பகுதி, இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தின் படிமுறைகள் தொடர்பிலான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இது ஒரு கோட்பாட்டு ரீதியான வினாவாக இருப்பதால் விபரமான விடைகளை எழுதியிருக்க முடியும். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விடயங்களை வழங்கியிருந்தனர் ஆயினும் தெளிவானதும் விபரமானதுமான விளக்கங்களை வழங்கியிருக்கவில்லை. செயலாற்றுகையானது சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

சம்பந்தமற்ற பொதுவான விடைகளாக கட்டுப்பாட்டு இடர், கழிப்பனவு இடர், உயர் இடர் போன்றவை எழுதப்பட்டிருந்தன.

### <u>பகுதி B</u>

இப்பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடையளித்திருந்ததுடன் விடய ஆய்விலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டிய விபரங்கள் மிக அதிகமாகக் காணப்பட்டன.

### <u>பகுதி C</u>

பரீட்சகர், தகவல் தொழில்நுட்பவியல் கட்டுப்பாடுகளில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவைப் பரீட்சித்திருந்தார். இது தகவல் தொழில்நுட்பவியலிலுள்ள பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவைப் பரீட்சித்திருந்தது.

இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்த அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவை முழுவதுமாக பிழையாக விளங்கிக்கொண்டிருந்ததுடன் அவர்களில் பலர் வரையறுக்கப்பட்ட அணுகல் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் மாத்திரம், பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் ஆகிய இரண்டிற்குமான பௌதிகப் பாதுகாப்பு போன்ற

பொதுவான விடைகளை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பிரயோகக் கட்டுப்பாடுகளுக்காக பொதுக் கட்டுப்பாடுகளின் விடைகளை எழுதியிருந்தனர்.

வினாவின் இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல. 09** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் - 25)

**<u>பகுதி A (a)</u>**

உரிமம் ஒன்றின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஐந்து விடயங்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர்.

பாடப் புத்தகத்தை படித்தவர்கள் சம்பந்தப்பட்ட விடைகளை எழுதியிருந்ததுடன் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வினாவில் கேட்கப்பட்டதைப் பிழையாக சில பரீட்சார்த்திகள் விளங்கிக் கொண்டிருந்ததுடன் ''பீட்டா சப்பாத்துக்கள்'' கம்பனியுடன் தொடர்புடைய விடயங்களை எழுதியிருந்தனர்.

உதாரணம்: காப்புறுதிக் கோரிக்கையின் வசூலிக்கத்தக்க தன்மை:

- அழிவடைந்த கட்டடத்தின் புனரமைப்பை நிறைவு செய்வதற்கான ஆற்றல்
- பயன்படுத்தப்பட்ட தொடர்ந்தியங்கும் தன்மைக் கோட்பாட்டின் அடிப்படையிலான பொருத்தத்தன்மை போன்றவை

வெற்றிகரமாக அளிக்கப்படாத விடைகளில் பின்வரும் பிழையான / சம்பந்தமற்ற விடைகள் அவதானிக்கப்பட்டன:

சில பரீட்சார்த்திகள் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களின் கூறுகளை வழங்கியிருந்தனர்.

(முத்தரப்பு தொடர்புடைமை, பாட விடயம், பொருத்தமான நியமம், சான்று மற்றும் உறுதிப்பாட்டு அறிக்கை)

**<u>பகுதி A (b)</u>**

2018 செப்ரெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான பீட்டா சப்பாத்துக்கள் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கைக்கு வேறு ஏதாவது திருத்தங்கள் தேவையா என்பதை மதிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். பரீட்சகர், தொடர்ந்தியங்கும் தன்மை பிரச்சினை இருக்கும்போது கணக்காய்வு அறிக்கையிடல் மீதான அறிவைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்திருந்தார். அதற்கிணங்க, போதுமானளவுக்கு வெளிப்படுத்தப்பட்ட பொருள் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படும்போது தொடர்ந்தியங்கும் தன்மை எடுகோளாக எடுக்கப்பட வேண்டியவை, தரப்பட்ட விவரணத்திற்குப் பொருத்தமானதா என்பதை அடையாளம் காண்பதைப் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சகர் எதிர்பார்த்திருந்தார். ஆயினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடயப் பந்தியில் வலியுறுத்தப்பட்டவற்றுடன் திருத்தப்படாத அபிப்பிராயமாக கணக்காய்வாளரின் அறிக்கை மீதான தாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கும் சரியாக மதிப்பிடுவதற்கும் தவறியிருந்தனர்.

எவ்வாறாயினும், வினாவைப் பற்றிய சரியான புரிதலின்றி இருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர் என்பதுடன் அவர்கள் தொடர்ந்தியங்கும் எடுகோள் தொடர்பில் பின்வருமாறான தவறான விடயங்களை எழுதியிருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர்:

- தொடர்ந்தியங்கும் எடுகோளிற்கான முகாமைப் பொறுப்பு
- தொடர்ந்தியங்கும் எடுகோள் பற்றிய முகாமையின் மதிப்பீடு
- தொடர்ந்தியங்குதல் பற்றிய மீளாய்வு தொடர்பில் பிரயோகிக்கப்பட்ட கணக்காய்வு விதிமுறைகள்

**<u>பகுதி B</u>**

சுய நாட்ட அச்சுறுத்தல், சுய மீளாய்வு அச்சுறுத்தல் மற்றும் துணை வலிமை அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு இவ்விரெண்டு உதாரணங்களை அடையாளம் காணுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். சரியான பாட அறிவைப் பெற்றிருந்த பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியாக விடையளித்திருந்தனர். சிலர் உதாரணங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு அச்சுறுத்தலையும் விபரித்திருந்தனர். அத்துடன் வெற்றிகரமாக விடையளித்திராத அதிகளவான பரீட்சார்த்திகள் சுய மீளாய்வு அச்சுறுத்தல் மற்றும் துணை வலிமை அச்சுறுத்தல் ஆகிய இரண்டையும் குழப்பி எழுதியிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் தொழில்சார் கணக்காளர் களுக்கான நன்னெறிக் கோவையில் வகுத்தமைக்கப்பட்டிருந்த அடிப்படைக் கோட்பாடுகளை அடையாளம் கண்டிருந்தனர். இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

**<u>பகுதி C (a)</u>**

இங்கு **ஹன்ட் கம்பனியின்** வரி ஆலோசகராக மேலதிக ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வது தொடர்பில் **S & S** மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். பரீட்சகர், அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கரு வேலைச் சட்டகம் ஆகியன தொடர்பான நன்னெறிக் கோவையின் படிமுறைகளைப் பரீசிப்பதற்கு எதிர்பார்த்திருந்தார். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகளே சரியாக விடையளித் திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் ஒரு பிரத்தியேக ஈடுபடுத்தல் கடிதத்தை ஒப்பமிடுவதன் மூலம் ஈடுபடுத்தல் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதாக விடையளித் திருந்தனர். விடைகளில் அடையாளம் காணப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு:

- சில பரீட்சார்த்திகள் **ஹன்ட் கம்பனியின்** பக்கத்திலிருந்து சில படிமுறைகளை விபரிப்பதற்கு எத்தனித்திருந்தனர்.
- வேறு சிலர் பணியினை ஏற்றுக்கொண்டதன் பின்னரான வருமான வரிக் கணிப்பீடுகள் தொடர்பில் விபரித்திருந்தனர். (தகவல்களைப் பெறுதல், அனுமதிக்கத்தக்க மற்றும் அனுமதிக்க முடியாத செலவுகளைக் கருத்திற் கொள்ளுதல், வரிவிதி வருமானத்தைக் கணிப்பிடுதல், பொருத்தமான வரி வீதத்தைப் பிரயோகித்தல் போன்றவை)

**<u>பகுதி C (b)</u>**

**S & S** தமது நிறுவனத்தினுள் தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைத் தாபித்திருப்பின், 'வாடிக்கையாளர் தொடர்பினை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்தலின்' மூலகத்தினை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். பரீட்சகர், தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலகங்களில் ஒன்றினைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்திருந்தார். சரியான பாட அறிவினைப் பெற்றிருந்த சில பரீட்சார்த்திகளைத் தவிர ஏனையவர்கள், 'தரம்' என்ற பதத்தினைக் கருத்திற்கொண்டு மிகவும் பொதுவான விடைகளை அளித்திருந்தனர். பொதுவாக அவதானிக்கப்பட்டவைகள் பின்வருமாறு:

வினாவைப் பற்றிய சரியான புரிதலின்றிக் காணப்பட்ட பரீட்சார்த்திகள் வழிப்படுத்தல், மேற்பார்வை செய்தல், மீளாய்வு செய்தல் போன்ற நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு ஒன்றிற்குத் தேவைப்படுகின்ற தரக் கட்டுப்பாடுகள் பற்றி எழுதியிருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட 25 புள்ளிகளில் 30 % - 40 % ஆன புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

\- - -

**<u>பரீட்சையின் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள் :</u>**

- பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.
- இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிக.
- பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
- கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.
- கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட் டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.
- பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்பு களை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.
- பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின் போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் விளைதிறனான வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருக்க வேண்டும்.
- விடைகள் யாவும் வினாத்தாளில் தரப்பட்டதைப் போன்று பொருத்தமாகவும் துல்லியமாகவும் இலக்கமிடப்படல் வேண்டும்.
- தேவையான இடங்களில் கோட்பாடு மற்றும் அதன் பிரயோகங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை விளங்கிக்கொள்வதும் உதாரணங்களையும் எழுதுவதும் மிகவும் முக்கியமானது.
- விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளனவா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -